## மேலும் இலவச பிரதிநிதிகளுக்கும், இலவச பத்திரிக்கை பிரதிநிதிகளுக்கும், எங்களை தொடர்பு கொள்ளுங்கள்





இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk




# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 12


- "நீங்களும் பரிசுத்தரராயிருங்கள்"
- தேனீ தேனாய் இருந்து ஒப்புக்கொடு!
- 2ம் நூற்றாண்டின் ஆரம்பகால விசுவாசிகளின் கிறிஸ்தவ வாழ்க்கை
- நோவா - பழைய உலகின் அழிவு
- மனதுருக்க முள்ளவர்களாயிருங்கள்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

## புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**

**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் மற்றும் சந்திர மோகன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



காரணம் இதற்கு முன்னால் என்ன நடந்தது என நமக்குத் தெரியாது.

நாம் எப்போழுதுமே அவர்களின் நடவடிகையைக் கண்டும் காணாமல் விடுகிறோம் என்றில்லை. ஆனால் அவர்களுக்கிருந்த அதே பிரச்சனைகளை நாமும் கடந்து வந்திருப்போமானால் நாம் சகித்து வந்திருப்போமானால், ஒருவேளை அவர்கள் நடத்தையை விட நாம் சிறப்பாக நடந்திருக்க மாட்டோம்.

இக் காரணத்திற்காகவே, நாம் அதிக மனதுருக்கமுள்ளவர்களாக, அதிகப் பொறுமையுள்ளவர்களாக, பிறரை அதிகம் புரிந்துகொள்பவர்களாக இருப்பது அவசியம், நாம் சந்திதயாரானாலும் அவர்களிடம், "உன் இடத்தில் நான் இருந்தால், உன்னைப் போலத்தான் நான் உணர்ந்திருப்பேன்" என்று சொல்வோம். இது மாய்மாலமல்ல. உண்மையில், நாம் அவனாயிருந்து, மனதளவிலும், சரீரத்திலும் அவன் கஷ்டப்பட்டது போலிருந்தால், அவனைப் போலத்தான் உணர்ந்திருப்போம், நடந்திருப்போம்.

நாம் விரும்பி எதிர்பார்ப்பதை விடக் குறைவாக ஒருவரது நடவடிக்கை இருக்குமாயின், நாம் என்ன செய்யலாம்? அவரின் வார்த்தைகளைக் கேட்க சம்மதிக்கலாம், சற்று கவனம் செலுத்திப்பார்க்கலாம், மனதுருக்கமாயிக்கலாம், அக்கரை காட்டலாம்.

"உங்கலைச் சிநேகிக்கிறவர்களையே நிங்கள் சிநேகித்தால் உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே"

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள், அப்போழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்ளே. அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்"

அந்தச் சிறுவர்கள் தவறாக நடந்து கொண்டது உண்மை தான். ஆனால் காரணகாரியங்கள் தெரியவந்ததும் கோபம் மனதுருக்கத்திற்கு இடம் கொடுத்தது. மற்றவர்கள் ஏன் அப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் மனதுருக்கம் காட்டுவது ஞானமான செயல். ஏனெனில் நமக்குத் தேவைப்படும் இரக்கத்தையெலலாம் நம் ஆண்டவரிடமிருந்து பெறப் போகிறோம்.

''மன்னியுங்கள், அப்போழுது மன்னிக்கப்படுவீர்கள் கொடுங்கள் அப்போழுது உங்களுக்கும் கொடுக்கப்படும், அமுக்கிக்குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து. உங்கள் மடியிலே போடுவாரகள். நீங்கள் எந்த அளபினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்."

# மனதுருக்க முள்ளவர்களாயிருங்கள்

தொடர் வண்டி நிற்கவும், ஒரு மனிதனும் மூன்று சிறுவர்களும் வண்டியின் அந்தப் பெட்டிக்குள் ஏறுகிறார்கள். அந்த மனிதன் காலியிடம் ஒன்றில் அமர்ந்து கொள்கிறான். இன்னும் காலியிடங்கள் இருந்தாலும் சிறுவர்கள்



அங்குமிங்கும் ஓடி, சக பயணிகளுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலான பயணிகள் மாலை செய்தித்தாளில் கண் பதித்து செய்திகளைப் படிப்பதில் மூழ்கிவிட்டார்கள். இருப்பினும் வெகு விரைவில் பயணிகள் அனைவருமே கட்டுப்பாடற்ற இச்சிறுவர்களின் நடத்தையால் பாதிக்கப்பட்டுக் கலவரமடைந்தார்கள்.

கடைசியில் ஒருவர் அப்பிள்ளைகளின் தந்தையிடம் அவர் குழந்தைகள், எல்லாருக்கும் தொந்தரவு கொடுக்கிறார்கள் என்றார். அவர் தலையைத் தொங்கப்போட்டவாறே, "வருந்துகிறேன், என்ன செய்யவென்றே எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது தான் மருத்துவமனையிலிருந்து வருகிறோம். ஒரு மணி நேரத்திற்கு முன்பு தான் அவர்கள் அம்மா இறந்துபோனாள் , நிலைகுலைந்து போன பிள்ளைகளுக்கும் என்ன செய்யவேண்டும் என்று தெரிவில்லை. மணிக்கணக்காக அவர்கள் ஒரு மருத்துவமனை அறையில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் உங்களுக்குத் தொந்தரவாயிருப்பதற்காக வருந்துகிறேன்," என்றார்.

உடனேயே பயணிகளின் மனநிலை, உணர்வுகள் மாறின. இப்போழுது, பிள்ளைகளின் கட்டுப்பாடற்ற நடத்தையால் கோபமடைந்த ஒவ்வொருவரும் மனதுருக்கம் கொண்டவர்களானார்கள்.

எது மாறிற்று ? பிள்ளைகள் முன்போலவே கட்டுப்பாடின்றி நொடியாடுகிறார்கள். பயணிகளின் மனப்பான்மை மாறிவிட்டது, எனெனில் இப்போழுது பிள்ளைகள் ஏன் அப்படிக்கட்டுப்பாடின்றி நடந்து கொள்கிறார்கள் எனப் புரிந்து கொண்டார்கள்.

நம் சொந்த மனநிலைக்கேற்ப மற்றவர்களின் நடத்தை இல்லாதிருக்கும்போது, நாம் மட்டும் மனதுருக்கத்துடன் இருக்கக் கற்றுக் கொண்டால் எவ்வளவு நலமாயிருக்கும்!

மக்கள் ஏன் அவ்விதமாக நடந்து கொள்கிறார்கள் என எப்போதுமே நாம் அறிந்து கொள்ள முடியாது. அவர்கள் இப்படி நடந்து கொள்வதற்கான



# "நீங்களும் பரிசுத்தரராயிருங்கள்"

"ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல், நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' *(1 பேதுரு 1:13-16).*

பேதுரு எழுதும்போது லேவியராகமத்திலிருந்து பல வசனங்களைச் சுட்டிக்காட்டுகிறான். (11:44,45; 19:2; 20:7,26; 21:8). மேற்கண்ட



வசனங்களை மேற்கோள் காட்டிவிட்டு, விசுவாசிகள் ''அவர்களுடைய பாரம்பரியமான வீணான நடத்தையினின்று, இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டதை'' நினைவு படுத்துகிறான். பேதுரு *(1.பேதுரு 1:18,19).* எனவே பரிசுத்த ஜனமாகவும், விலைக்கு மீட்கப்பட்டவர்களாகவும், அந்தகாரத்தினின்று ஒளியினிடத்துக்கு அழைக்கப்பட்ட ராஜாக்களும் ஆசாரியர்களுமாக *(1 பேதுரு 2:9,10)* நாம் இருக்க வேண்டும்.

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் "பரிசுத்தம்" என்ற வார்த்தைக்கு (எபிரெயு பாஷையில் "காதேஷ்" என்றும், கிரேக்கு பாஷையில் "ஹகியோஸ்" என்பவரை) நிகராக இருக்கிறது. அதாவது, ''பிரித்தெடுக்கப்பட்டது, தூய்மை, சுத்திகரிக்கப்பட்டது". இப்படிப்பட்ட பிரித்தெடுப்பின் மூலம் உருவான ஜனமும் சமுதாயமுமே சபையாகும்.

இயேசு கிறிஸ்துவின் ஒழுங்கின்படி, சபையானது "அழைக்கப்பட்டு" "பிரித்தெடுக்கப்பட்ட"வர்களை உறுப்பினர்களாக கொண்டிருக்க வேண்டும். அவர்கள் மலையின் மேல் "இருக்கிற பட்டணம்" போலவும், இருள் சூழ்ந்த கடலின் நடுவில் ஒளிகாட்டும் "தீவு" போலவும் *(மத்தேயு. 5:14-16),* கோணலும்

மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களுமாக *(பிலிப்பியர் 2:14-15)* பிரகாசிக்கவேண்டும். அவர்களுடைய ''பரிசுத்தம்'' அவர்களுக்கும் (மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி) அசுத்தம் என்று பேரெழுதப்பட்டவைகளுக்கும் விலகி நிற்பது மாத்திரமல்ல. ஆனால் அது ஆவிக்குரிய முறையில் விலகியிருத்தலும் மனதார குணத்தில் அதை வெளிப்படுத்துவதில் உள்ளது.

1 பேதுரு 1:16 என்ற வாக்கியம் மத்தேயு 5:18ன் எதிரொலி : ''பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்''.

''பூரணம்'' என்ற வார்த்தை (மறுபடியும் எபிரெயு மற்றும் கிரேக்கு மொழிகளில்) ''முழுமை அல்லது முடிந்தது'' என்றும், ''பூரணமானது'' போல - ஒருவன் தனது சிந்தையில் எந்த சலனமுமின்றி உண்மை விசுவாசமாயிருப்பதைக் குறிக்கிறது. இது இயல்பாக நம்மை மலைப்பிரசங்கத்தை நினைக்கச் செய்கிறது. கர்த்தர் சொன்னபடி, ''நீங்கள் என்னில் அன்பு கூர்ந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' : அவையாவன : ஜெபம், சுயவெறுப்பு, சத்துருக்களை சிநேகித்தல், தானதர்மம், பிரசங்கித்தல் முதலியவன.

''நீங்கள் பூரண சற்குணராயிருங்கள்'' இயேசு கிறிஸ்து உண்மையில் நம்மிடம் ''பரிபூரணத்தை'' எதிர்ப்பார்க்கிறாரா ? அதற்கு நேராக செல்வதற்கென்று நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் அவர் நிச்சயமாக எதிர்பார்க்கிறார். நம்மால் முடிந்த அளவு சிறப்பான முயற்சியைத் தவிர அதற்கு எந்த விதத்திலும் குறைவாக அவர் எதிர்ப்பார்ப்பதில்லை. அவரது பரிபூரணத்துக்கும் முழு பரிசுத்தத்திற்கும் ஏற்றவித எந்த குறைவுமின்றி இருப்பதை வேதவசனம் வேண்டுகிறது. நமக்கு நல்ல முன்மாதிரியாக இதில் விளங்குவது நமது தேவன் ஒருவரே.

''நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்''.

''பரலோகத்திலுள்ள உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்''.

பரிசுத்தம் என்பது மனதின் தன்மையிலும் கிரியைகளின் தொகுப்பிலும் அடங்கும். அது ஒன்றைவிட்டு ஒன்று இணை பிரிக்க முடியாதது. தேவனுடைய கிருபையில் திருப்தியடைந்து, நாம் ''பரிசுத்தத்தை'' சுலபமாக மனதின் தன்மையாக - வெறும் ''நீதி''யின் ''உணர்வை'' ஏற்றுக்கொள்ள நேரிடலாம். இதில் ''கிரியை''க்கு முக்கியத்துவம் கொடாமல் போக வாய்ப்புண்டு. ஏனெனில் கிறிஸ்து நம்மை மன்னித்துவிட்டபடியால் கவலையற்று இருக்கலாம்.

இயேசு கிறிஸ்து நம்மை மன்னிப்பது உண்மை எனினும், இரட்சிப்பு கிருபையினாலே கிடைக்கிறது. ஆனால் நமது ''கிரியைகள்'' பரிசுத்தத்திற்கான நமது முயற்சிகள் - நாம் தவறும் போது நமக்கு பாவமன்னிப்பு கிடைத்திருப்பதன் நிச்சயத்தை உறுதிப்படுத்துகின்றன. இதில் சிக்கலான உண்மை எதுவென்றால், நாம் மனபூர்வமாக பரிசுத்தம் மற்றும் பரிபூரணத்தை நிறைவேற்ற கடும் முயற்சி எடுக்காமல் தேவன் நமது பலவீனங்களை மன்னிக்க எதிர்ப்பார்ப்பது சரியல்ல.



**நமக்குப் பாடம்:**

சேத்தின் சந்ததி ''மனுஷ குமாரத்திகளை'' விவாகஞ்செய்ய ஆரம்பித்தபோது சத்தியம் தேய்ந்துபோக ஆரம்பித்தது. கலப்புத்திருமணங்கள் அப்போதிலிருந்து சத்தியத்தைப் புரட்டி மார்க்க பேதத்துக்கு வழி நடத்தி வந்துள்ளன.

தேவன் ஜலப்பிரளயத்தைக் கொண்டு பூமியை அழிக்கும் படி தீர்மானித்திருந்தார். ஆனாலும் தமது நீடிய பொறுமையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தும்படி 120 வருடங்கள் தாமதஞ்செய்து, அதன்மூலம் உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பதற்கு ஏற்றவாறு அவர் உறுதிபடுத்தினார்.

நோவா, தன்னந்தனியாக கைவிடப்பட்டிருந்தாலும், உண்மையோடு தவறாமல் தேவனுடைய நீதியைக் குறித்து பிரசங்கித்தான்.

தேவனுடைய வழிகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், நோவா தன்னையும் தனது குடும்பத்தாரையும் இரட்சித்துக்கொண்டான்.

இன்றைய உலகம் ''நோவாவின் காலத்தில் இருந்தது போலவே'' இருக்கிறது. இந்தக் காலத்தின் அடையாளமானது, ''ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள். பெண்கொண்டு கொடுத்தார்கள்'' என்பது போன்று எதற்கும் கவலைப்படாத வாழ்க்கையாக உள்ளது. (லூக்கா 17:26-27).

நோவா அக்கிரமத்தின் அழிவினின்று தண்ணீரினால் காக்கப்பட்டது போல, நாமும் பாவ அழிவினின்று கிறிஸ்துவுக்குள்ளாகி ஞானஸ்நானம் பெறுவதினால் இரட்சிக்கப்பட முடியும்.

# 2ம் நூற்றாண்டின் ஆரம்பகால விசுவாசிகளின் கிறிஸ்தவ வாழ்க்கை

2ம் நூற்றாண்டு விசுவாசிகளின் வாழ்க்கையை கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்த கிரேக்க தத்துவஞானி ஒருவர் அவர்களின் சுத்தமான பக்தியினால் பெரிதும் கவரப்பட்டார். தேவையில் உள்ளோருக்கு அவர்கள் காட்டிய மனதுருக்கமும் பரிவும் அவரை வியக்க வைத்தது. அவர் இவ்விதம் எழுதினார் : ''அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள். விதவையை அவர்கள் கவனியாமல் விடுகிறதில்லை. அநாதையை இரட்சித்துக் காப்பாற்றுகிறார்கள். அந்நியரைக் கண்டால், அவர்களைத் தங்கள் வீட்டிற்குள் சேர்த்துக்கொள்கிறார்கள். சரீரத்தின் படியல்ல, ஆவியின்படி சகோதரர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் மத்தியில் ஏழை ஒருவன் இறந்தால், அவரவர் திராணிக்குத் தக்க முறுமுறுக்காமல் பணம் கொடுத்து அவனை அடக்கம் செய்கிறார்கள். மேலும் கர்த்தரின் நாமத்தினிமித்தம் சிலர் குற்றவாளிகள் எனத் தீர்க்கப்பட்டு அல்லது சிறையில் அடைக்கப்பட்டால், அவர்கள் பணம் கொடுத்து அவர்களின் தேவையை சந்திக்கிறார்கள். முடிந்தால் அவர்களை சிறையிலிருந்து மீட்கவும் செய்கிறார்கள். ஒரு அடிமையோ, ஏழையோ இருந்தால் இரண்டு அல்லது மூன்று நாட்கள் உபவாசம் இருந்து, அவர்கள் சாப்பிட்டிருந்தால் ஆகியிருக்கக் கூடிய செலவை அந்த அடிமை/ஏழைக்கு அனுப்புகிறார்கள்.''

அந்த உடன்படிக்கையின் சின்னமாக, தேவன் வானத்தின் மேகத்தில் தம்முடைய வானவில்லை வைத்தார். சூரிய வெளிச்சம் தண்ணீர் துளிகளின் துவானலில் படும்போது மழைநீரில் வானவில் காணப்படுகிறது. ஒரு வானவில்லில் ஏழு நிறங்கள் அடங்கியுள்ளன. ஏழு என்பது உடன்படிக்கையின் எண்ணிக்கை இந்த ஏழு நிறங்களும் கலப்பது சூரிய வெளிச்சத்தின் பூரண கதிரை நமக்கு அனுப்புகிறது. வேதாகம அடிப்படையில், சூரியன் இயேசுவைக் குறிக்கும், “நீதியின் சூரியன்” (மல்கியா 4:2). மேகம் பரிசுத்தவான்களை (எபிரெயர் 12:1)யும், மழை கர்த்தர் பூமிக்கு இறங்கிவருவதன் உபதேசத்தையும் காட்டுகிறது (உபாகமம் 32:2). ஆகவே, வானவில்லானது, எல்லா ஜனங்களும் யாஹ்வே கர்த்தரை அறிந்துக் கொள்ளப்போகும் காலத்தை முன்குறிக்கிறது. அப்போது இயேசு கிறிஸ்துவின் மகிமையானது சகல பரிசுத்தவான்களின் பல வழிகளின் மூலமாக ஒன்றாகச் சேர்ந்து அவருடைய ஆட்சியின் பரிபூரண மகிமையையும் பரிசுத்தத்தையும் காட்டும்.

இதை மிகவும் தத்ரூபமாக, யோவான், வெளிப்படுத்தின விசேஷம் 4-ல் ராஜ்யம் நிலைநிறுத்தப்படுவதற்கு உவமையாக சித்தரித்துள்ளான். அதில் இயேசுகிறிஸ்து சிம்மாசனத்தின் மையத்தில் உட்காருவார். (வ.2), அவரைச்சுற்றி சகல பரிசுத்தவான்களும் சூழதரிசிப்பார்கள் (வச 4,6). அவர்களைச் சுற்றி ஒரு வானவில் இருக்கும் என்று எழுதப்பட்டுள்ளது.

அதைப்போல, வெளிப்படுத்தல் 10ல், ஒரு கனம் பொருந்திய தூதன் (இயேசு கிறிஸ்துவையும் அவருடைய அழிவில்லாத பரிசுத்தவான்களையும் காட்டுகிறது), வானவில்லைத் தரித்தவனாகத் தேவனுடைய நியாயத்தீர்ப்பை தேசங்களின்மேல் நிறைவேற்றுகிறதைக் காண்பிக்கிறது.

## ஞானஸ் நானத்தின் அடையாளம்

பேதுரு (1 பேதுரு 3:20ல்) பேழையில் நோவா அனுபவித்த இரட்சிப்பை திருமுழுக்குக்கு ஒப்பிட்டு பேசுகிறான். இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் மற்றும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுதல் மூலம் நமது பாவங்கள் கழுவப்படுகிறது. அந்தப் படியே நோவாவின் நாட்களில், ஜலப்பிரளயம் பழைய உலகத்தின் பாவங்களைக்கழுவி, புது உலகம் உருவாகப் பேருதவியாக இருந்திருக்கும். ஞானஸ்நானம் புதுவாழ்வு ஆரம்பிப்பதன் ஓர் அடையாளமாக உள்ளது (அப்போஸ்தலர் 2:38; ரோமர் 6:4 ஒப்பிடுக). ஞானஸ்நானத்தின் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள்ளாகிறோம் (கலாத்தியர் 3:27). கிறிஸ்து நமது மீட்பின் பேழையாக இருக்கிறார்.

நாம் “கிறிஸ்துவுக்குள்” இருக்கிறபடியால், தேவநியாயத் தீர்ப்பு பொல்லாத உலகத்தாரின் மேல் ஊற்றப்படும்போது, நாம் அதினின்று காக்கப்படுகிறோம். அந்த உலகமானது “நோவாவின் காலத்தில் இருந்ததுபோலவே” இருக்கும் என்று இயேசு கூறியிருக்கிறார். ‘‘நோவா” என்ற வார்த்தையின் அர்த்தம் “இளைப்பாறுதல்” என்பதாகும். தேவனுடைய நியாயத்தீர்ப்பின் தினம் வரும்போது பூமியின்மேல் அவர் புதிய ஒழுங்கை ஏற்படுத்துவார். அப்போது தேவனுடைய ஜனங்களாகிய உண்மையுள்ளவர்களுக்கு ‘‘இளைப்பாறுதல்” உண்டாயிருக்கும் (எபிரெயர் 4:9).



## மாம்சத்துக்கான பிரயத்தனம்

எனினும், ஒவ்வொரு மனிதனும் தனது உள்மனதில் அறிந்துள்ளபடி, பரிசுத்த வாழ்விற்கு ஏதாவது தடையை வரவழைத்துக்கொள்கிறான். இத்தடைகள் பலவிதமானவைகள் :

(1) “எல்லாருமே பரிபூரணம் மற்றும் பரிசுத்தத்திலிருந்து தவறுகிறார்கள். அதனால் நான் தவறினாலும் பரவாயில்லை” ஆனால் கேள்வி இப்படியிருக்கக் கூடாது : “முழு பரிபூரணம் சாத்தியமா ?” என்பதற்குப் பதிலாக, “நான் பரிபூரணம் அடையும்படி மனதார எடுக்கும் முயற்சிகளால் சமீபத்தில் சேரமுடியுமா ?” என்றிருக்க வேண்டும். இயேசு கூறினார். :

“இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்; அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும், அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” *(லூக்கா 13:24).*



அநேகர் இறுதியில் இரட்சிப்படையாமல் போவார்கள். அவர்கள் முயற்சி எடுக்காமலிருந்ததினால் அல்ல, ஆனால் வேண்டிய அளவு முயற்சி எடுக்காமலிருந்ததினாலேயே அப்படியாகும்.

(2) ‘‘நான் அநேகரைவிட எவ்வளவோ பரவாயில்லை; நிச்சயமாகஅது போதும்’’. ஏனெனில், அவர்கள் வெளித்தோற்றத்தை கவனித்தனர். இது பரிசேயரின் வழக்கமான தவறான வழியாய் இருந்தது. இது நமது தவறாகவும் இருக்கலாம். ஒருவேளை நாமும் கூட உலகத்தைவிட “சற்று பரவாயில்லை” என்கிறோமா ? இன்னும் கொஞ்சம் வேதவாசிப்பு ? இன்னும் கூடுதலாக ஐக்கிய ஆராதனை பங்கெடுப்பு ? மோசமான பாவங்களிலிருந்து சற்று கூடுதலாக விலகியிருத்தல் ? இப்படிப்பட்ட சுயவெளித் தோற்றம் மிக ஆபத்தாக இருக்கலாம். இது நம்மை கவலையற்ற, ஆவிக்குரிய ஜீவியத்தில் மந்த நிலைக்கு பின்னடைவு காணச்செய்ய வல்லது. நாம் விழித்தெழும் முன்னர் நம்மை நாமே “பூசிமெழுகி” மறைந்த நிலையில் காண்போம். இது மிக ஆபத்தானது !

‘‘மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்” *(மத்தேயு 23:27,28).*

(3) “அன்பு முக்கியம், கிரியைகளெல்லாம் அடுத்தபடி”. ஆனால் இயேசு கூறினார் : “நீங்கள் என்னில் அன்பு கூர்ந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்”. வேதாகமத்தில் எங்கே அன்பானது உணர்வு பெருத்தது என்றும் கிரியை அற்றது என்றும் உள்ளது? கீழ்ப்படிதல் இல்லாமல் அன்பிற்கு விலை இல்லை. கீழ்ப்படியாமை அன்பின் வெளிப்பாடாக இருக்கமுடியுமா?

**கிறிஸ்துவின் சிந்தையைத் தேடுதல்**

இப்படியிருக்க, வேதாகம பரிசுத்தமானது கிறிஸ்துவின் சிந்தையாக நம்முடன் இசைந்திருக்கிறது. *(பிலிப்பியர் 2:5).* அவருடைய சிந்தையை எந்த அளவு நமதாக்கிக் கொள்ளுகிறோமோ, அவ்வளவு நாம் நமது சார்புகளில் ஐக்கியமும் நேர்மையும் “பரிபூரண”மும் உள்ளவர்களாக இருப்போம் *(மத்தேயு 6:21-24).* தேவனுக்கும் வியாபாரத்துக்கும், அல்லது தேவனுக்கும் விவசாயத்துக்கும், அல்லது தேவனுக்கும் சரீர பெருக்கத்துக்குமா, எதற்கு எந்த இரண்டாவது “எஜமானுக்கு” ஊழியஞ் செய்வதற்கும் வாழ்வின் காலம் போதாத சுருக்கமாக இருக்கிறது. எனவே, பரிசுத்தத்திற்கு முதற்படி “தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுவது ஆகும்” *(மத்தேயு 6:33).* நாம் முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தைத் தேடாத பட்சத்தில் (வ.33) அதற்குப் பதிலாக வேறே எதைத் தெரிந்தெடுத்தாலும் அதில் எந்த அர்த்தமும் இராது.

இந்தக் கடைசி வார்த்தை உண்மையானதா? நாம் போதை மருந்தையோ, ஏதாவது தொழில் முன்னேற்றத்தையோ, அரசியல், கால்பந்து, கிரிக்கெட், பணம் அல்லது குடும்பம் அல்லது விபசார வாழ்க்கை சுருங்கக் கூறின், “அவமானம்” நிறைந்த தேவையற்ற காரியங்கள் அல்லது ‘‘நற்கீர்த்தி’’யுள்ள சமூக நன்மைகளைத் தெரிந்தெடுப்பதால் ஏதாவது நன்மை உண்டா? இவைகளில் எதைத்தெரிந்தெடுத்தாலும் அது உண்மையாக நாம் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கத்தை நிறைவேற்றாது. வனாந்தரத்தில் பயணஞ் செய்கிற ஒருவன் தனது தவறான வழியில் ஒரு நீரூற்றைக் காணத் தவறியபின் மரிக்குந்தருவாயில் அது முக்கியமாக இருக்குமா?

**தவறாமல் தொடரும் முயற்சி**

சபை அங்கத்தினன் ஆனதால் ஒருவர் “கிறிஸ்தவன்” ஆவதில்லை. இது, ஒரு இசைக்கருவியை உரிமைப்படுத்தினால் தன்னை இசைஞானி என்று எண்ணும் ஒருவனுக்குச் சமமாகும். அவன் தொடர்ந்து இயேசு கூறின பிரகாரம் பரிசுத்தமாக வாழ விடாமுயற்சி எடுக்கவேண்டும். அது நேர்மையாகவும் எதிர் மறையாகவும் தொடரவேண்டும். வயதான திறமை நிறைந்த சிற்பி ஒருவன் தனது இறுதிகட்ட சிற்பத்தின் தோற்றத்தை வடிவமைத்துக் கொண்டிருந்தான். தனது கலைத்திறனில் உராய்வு, தேய்வு, பளபளப்பு என்ற பல முயற்சிகளை ஈடுபடுத்தினான். அவனை பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் தனது பொறுமையையிழந்து, “இது எப்போது முடிவடையும்?” என்று கேட்டான். அதற்கு அவன் “அவர்கள் இதை எடுத்துச் செல்லும் வரை என் பணி தொடரும், அதுவரை ஓயாது” என்று பதில் வந்தது. இப்படியே நமது வாழ்க்கையும் அமைய வேண்டும். நாமும் கூட பரிசுத்தத்திற்கு நேராக பரிபூரணம் அடையும்படி



மழை நில்லாமல் இரவும் பகலும் நாற்பது நாட்களுக்கு தொடர்ந்து பெய்தது மன்றி தண்ணீரும் பீறிட்டு ஊற்றெடுத்தது. அதனால் மிக உயர்ந்த மலைகளும் மூழ்கின. 150 நாட்களாக பெய்த மழையினால் பெருகின ஜலப்பிரளயத்தில் பேழைமிதந்தது. “பூமியின்மேல் நடமாடும் சகல ஜீவ இராசிகளும், மனிதர், மிருகங்கள், ஊரும் பிராணிகளும், வானத்தில் பறக்கும் பட்சிகளும் பறவைகளும் அழிந்து போயினர். நோவாவும் அவனோடு அவன் குடும்பத்தார் எட்டுப்பேர் மாத்திரம் பேழைக்குள் காக்கப்பட்டார்கள்” (வச. 23).

**பேழையிலிருந்து வெளியே அனுப்புதல்** (ஆதியாகமம் 8:1-20)



தேவன் வானத்தின் பலகணிகளையும் பூமியின் ஊற்றுக்கண்களையும் மூடி மழையை ஓயப் பண்ணினார். அவர் பூமியின் மீது காற்று வீசச்செய்து நீரை வற்றப் பண்ணினார். அதனால் ஏழாம் மாதம் 17ம் தேதி பேழையானது அரராத் மலைகளின் உச்சியில் தங்கிநின்றது. பத்தாம் மாதம், முதல் தேதியில் பூமியின் மலைச்சிகரங்கள் காணப்பட்டன. நாற்பது நாட்கள் கழித்து, பேழையின் ஜன்னலைத் திறந்தப்பின் ஒரு காகத்தையும் ஒரு புறாவையும் வெளியே அனுப்பி நீர்வடிந்து விட்டதா என்று பார்த்தான். காகம் திரும்பி வரவில்லை. புறாவின் கால்கள் தங்க இடம் கிடைக்காததால் அது திரும்பிவந்தது (வச. 9). இன்னும் ஏழு நாட்கள் சென்று, புறாவை மறுபடியும் வெளியே அனுப்பினான். “அது கொத்திக் கொண்டுவந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயில் இருந்தது. அதினாலே நோவா பூமியின்மேல் ஜலம் குறைந்து போயிற்று என்று அறிந்தான்.” (வச.11). ஏழுநாட்கள் கழித்து, மூன்றாம் முறையாகப் புறா வெளியே அனுப்பப்பட்டது. அது திரும்பி வரவில்லை.

நோவா ஏறக்குறைய ஒரு வருஷமாகப் பேழைக்குள் இருந்தான் (7:11 உடன் 8:13-14யை ஒப்பிடுக). பின்பு தேவன், பூமியில் புது வாழ்வை ஆரம்பிக்கும்படி, நோவா தனது குடும்பத்தாரையும் தன்னோடு பேழையில் காக்கப்பட்டு இருந்த மிருகங்களையும் பறவைகளையும், பேழையைவிட்டு வெளியே அழைத்துச் செல்ல கட்டளையிட்டார்.

நோவா தனக்குச் சொன்னபடியே வெளியே புறப்பட்டான். அவனுடைய முதல் வேலை, தேவனுடைய இரட்சிப்புக்காக அவருக்கு நன்றி செலுத்தும்படி ஒரு பலிபீடத்தைக் கட்டி தகன பலிகளையிடுவதாக இருந்தது.

**தேவனுடைய உடன்படிக்கையின் சின்னம்**
(ஆதியாகமம் 8:21-22; 9:8-16).

தேவன் நோவாவின் பலிகளை ஏற்றுக்கொண்டார். அவர் ஒரு உடன்படிக்கை பண்ணினார். அதன்படி அவர்முன்பு செய்தபடி, பூமியைச் சபித்து, அனைத்து ஜீவராசிகளையும் அழிப்பதில்லை என்று ஆணையிட்டார். ஏதேனின் சாபம் பூமியின் மண்ணில் நிரந்தரமானபடியால் ‘முள்ளும் கொடுக்கும்’ பிறப்பித்தது. ஆனால் தேவன் என்றுமே பூமிமுழுவதிலும் அழிவு தரும் ஜலப்பிரளயத்தை அனுப்பப்போவதில்லை (ஏசாயா 54:9 ஒப்பிடுக).

பல ஆண்டுகள் கடந்துப் போனபின் பேழை ஒரு வடிவுக்கு வந்தது. அத்தனை ஆண்டுகள் நோவா தீர்மானமாக வேலைசெய்தான். காலஞ்செல்ல செல்ல, அவன் கூறின தேவ நியாயத்தீர்ப்பு வராதிருந்ததால், ஜனங்கள் நோவா சொன்ன வார்த்தைகளுக்குச் செவிகொடாமற் போனார்கள். அதைப் போலவே இன்றும் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்களை ஜனங்கள் அல்லத்தட்டி, தங்கள் சொந்த இஷ்டத்துக்கு நேராக நடக்கிறார்கள். *(மத்தேயு 24:36-39)* ஒப்பிடுக.

அப்பொழுது எந்த அளவில் நீடிய பொறுமை தேவையாக இருந்ததோ அதைப்போலவே இன்றும் இருக்கிறது. தாமதமாகிறதுபோல காணப்பட்டாலும், தேவ பக்தியற்றவர்களை அழித்து தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை இரட்சிக்கும்படி *(அப்போஸ்தலர் 17:31)* கிறிஸ்து குறிப்பிட்ட வேளையில் வருவார்.

## ஜலப்பிரளயம் (ஆதியாகமம் 7)



பேழை கட்டித் தீர்ந்தது. தேவன் சொன்னவைகளெல்லாம் அப்படியே நிறைவேற்றப்பட்டது. நோவாவும் அவன் குடும்பத்தாரும் உள்ளே செல்லும்படி கட்டளை பிறந்தது. (வச.1)

ஜலப்பிரளயம் வருமுன்பு நோவா பேழைக்குள் உலகத்தைவிட்டு வேர்பிரிக்கப்பட்டான் *(வச.4)* அப்படியே இயேசுவின் நண்பர்களும், தேவன் உலகத்தை நியாயந்தீர்த்து அழிக்கும்முன், தங்கள் ஜனத்தின் மத்தியிலிருந்து பிரிக்கப்படுவார்கள் *(ஏசாயா 26:20; 1. தெசலோனிக்கேயர் 4:16-17; மத்தேயு 24:31).*

தேவனுடைய வார்த்தையின்படியே நோவா பேழைக்குள்ளே ஒவ்வொரு சுத்தமான மிருகத்திலும் பறவையினத்திலும் ஏழு ஜோடி (ஆணும் பெண்ணும்) களை, ஒவ்வொரு அசுத்தமான மிருகத்திலும் பறவையிலும் இரண்டு ஜோடிகளை உள்ளே சேர்த்தான். (வச.2) பின்பு "யாஹ்வே கர்த்தர் வாசலை அடைத்தார்" (வ. 16) அப்படிசெய்வதின் மூலம் அவர் வெளியேயிருந்த அனைவரையும் அப்படியே நீக்கி வைத்தார்.

ஏழு நாட்கள் சென்றன. பூமியின்மேல் வரவிருந்த பேராபத்தை ஒருவர் கற்பனை பண்ணினால் தெரியும். கார்மேகங்கள் இருட்டிக் கொண்டே வந்தன. அது கருமையும், இருளும், ஆபத்தும் கொண்டுவந்தது. பின்பு பேய்காற்று வீச ஆரம்பித்தது. அதனுடன் மிகுந்த வேகத்துடன் மேலே வானத்திலிருந்து கன மழையும், பூமியின் மதகுகளும் ஊற்றுக்கண்களும் திறந்து வெள்ளமும் பீறிட்டுப் பாய்ந்து பூமியை நிரப்ப ஆரம்பித்தது.



தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதன் முடிவை நாம் சேராவிட்டாலும், இயேசு கிறிஸ்து வந்து நமது வேலை ஒய்ந்தது என்று அழைக்கும் வரை தொடர வேண்டும்.

## இரு உலகங்களிலும் நமக்கு சிறப்பானது கிடைக்குமா ?

அப்போஸ்தல நடபடிகளின் 5-ம் அதிகாரத்தில், தங்களை மிதமிஞ்சி காட்டி நடித்த ஆதி அப்போஸ்தலர்களில் அனனியா சப்பீராளின் துக்ககரமான முடிவைக் குறித்து வாசிக்கிறோம். இரு உலகங்களின் நடுவில் சிக்குண்டு, ஒவ்வொன்றிலும் ஒருகாலை வைத்து, தங்களது பக்தியில் குறைவுபட்டவர்களாக, பரிசுத்த ஆவியிடம் பொய் பேசத் துணிந்தனர். தாங்கள் விற்ற சொத்தின் ஒரு பகுதியை மறைத்துவைத்து, அதனிமித்தம் மரணஅடி வாங்கினர்.

நாமும் "பழைய மனிதனை விற்று" அதன் பலன்களை இயேசுவின் பாத பீடத்தில் வைத்தவர்கள். அதில் எதையாவது நாம் இன்னும் மறைத்து வைத்துள்ளோமா? "நான் இயேசுவுக்காக அதை இதையெல்லாம் ஓடி ஓடிச் செய்வேன், ஆனால் இதைமட்டும் எனக்காகச் செய்துகொண்டிருப்பேன்". இவ்வாறு எண்ணும்படி நம்மைநாம் போதித்து பயிற்சித்து வந்தால், ஒருபோதும் "பரிசுத்தம்" அடைய முடியாது. நாம் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியாது. "பழைய மனுஷன்" ஒரு அட்டையைப் போல ஒட்டிக்கொண்டு விடாமலிருப்பான். அவனைக் குறைவாக ஆதரித்து "போஷித்தால்", அவன் அதிகமாக தன்வசம் கவனம் திருப்ப ஆவன செய்வான். - முடிவில் மரித்துப் போவான்.

உண்மையில், கிறிஸ்துவின் சிலுவைக்கு மரியாதை கொடுத்தால், அது விலையுயர்ந்ததாகும். உண்மையில், இயேசுவைத் தேவனுடைய குமாரனாக ஏற்றுக்கொண்டால், அவருக்கே நாம் சேவை செய்ய வேண்டும். நமது பாவத்துக்கும் மரணத்துக்கும் பதிலாக குணம் வேண்டும் என்று நிச்சயமாக நாம் அறிவித்தால், அதற்கேற்ற "முழுசிகிச்சை"யும் நாம் பெறத் தீர்மானித்து செயல்படவேண்டும். இந்த போராட்டத்தில் "குறைவான நோக்கம்" அல்லது "திருப்தி" இருக்கவே கூடாது. பதிலாக ஜெயித்தே தீருவேன் என்று போராடுதல் அவசியம்.

"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்."

"பரலோகத்திலுள்ள உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்". அதற்குத் தேவையானது, நமது முழு அர்ப்பணிப்பு ஆகும்.

## பிறரால் கூடும்! உன்னால் முடியாது!

உனது ஆவியில் இயேசு கிறிஸ்துவைப்போல இருக்கும்படி கர்த்தர் உன்னை அழைத்திருந்தால், அவர் உன்னை சிலுவையறைதலுக்கும் தாழ்மைக்கும் வரவழைத்து, பிற கிறிஸ்தவர்களைப் பின்பற்றாமல் அவருக்கே கீழ்ப்படியும் வாழ்வை உனக்களித்து, பிறரை உனக்குப் பதிலாக நீ செய்யக்கூடிய நன்மைகளை உன் கண் முன்பு செய்ய அனுமதிக்கலாம்.

உனக்கு முன்பாக பிறர் தங்களைப் போற்றி, தங்கள் கிரியைகளில் தழைத்து

வெற்றி பெற்றது போல இருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவி இவற்றில் எதையும் நீ செய்யாமல் உன்னைத் தடுத்துக் கொண்டிருக்கும் நீ அதை மீறி முயன்றால், அதன் விளைவாக உன்னை நீயே வெறுத்து, உன் கிரியைகளின் மேல் கசப்படைந்து, அதை அழித்துப் போடக்கூடிய அளவுக்கு உன்னை வழிநடத்தும் பிறர் நன்றாக பணச்செழிப்பில் மிதப்பார்கள், அல்லது தங்கள் பெயர் நாட்டி தங்கள் சந்ததிக்கு விட்டுவைப்பார்கள். அவர்களுக்கு வசதி பெருகலாம். ஆனால் உன் விஷயத்தில் உன்னை ஏழையாகவே அவர் பராமரித்து வருவார். இதற்குக் காரணம், பொன்னுக்கு மேலாக சிறப்பான ஒன்றை நீ பெற தேவன் விரும்புகிறார். அவரையே சார்ந்திருப்பதனால், அனுதினமும் உன்னைக் கண்காண முடியாத பொக்கிஷத்திலிருந்து அவர் உன்னைப் போஷித்து வருவார்.

கர்த்தர் பிறரைக் கனமடையச் செய்து, அவர்களை பிறர் கண்முன் நிறுத்தி, உன்னை மறைவிடத்தில் வைப்பார். ஏனெனில் நிழலில் கனித்தரக்கூடிய பலன்களை அவர் உன்னிடமிருந்து எதிர்ப்பார்க்கிறார். அதன்மூலம் அவருடைய நாமம் மகிமைப்படும்.

அவர் பிறரை உயர்த்தி, உன்னை சிறுமைப் படுத்துவார். அவர் பிறரை அவருக்கென்று செயல்படுத்தி அதற்கான வெகுமானத்தைப் பெறச்செய்வார். ஆனால் உன்னையோ சதா உழைக்கச் செய்து, உன் உழைப்பை மர்மமாக வைப்பார். நீ செய்த பணியின் மேன்மை அருமையாக்கத்தக்கதாக அதன் பலனை பிறர் அனுபவிக்கும்படி விட்டு விடுவார். அவருடைய (இயேசு கிறிஸ்துவின்) வருகையில் உனது பணிக்கு பலமடங்கு பலன் கிடைக்கும்படி அவர் அதைத் தள்ளிப் போடுகிறார். அவர் உன்னை வெகு உன்னிப்போடு கவனித்து, வைராக்கிய வாஞ்சையாயிருந்து, நீ வார்த்தை மற்றும் உணர்வுகளில் தவறும்போது உன்னைக் கண்டித்து, உன் நேரத்தை வீணாக்குவதற்காகக்கடிந்து, பிற கிறிஸ்தவர்கள் அலட்சியப்படுத்துகிறவற்றை உன்னில் கவனிக்கிறார்.

எனவே, தேவன் சர்வவல்லவர் மாறாதவர், அவர் எதையும் தமது விருப்பத்தின்படி செய்வார் என்பதை மனதில் ஏற்றுக் கொள். தாம் செய்கிற ஆயிரம் கிரியைகளில் உனக்கென்று எதை எப்படிச் செய்கிறேன் என்று அவர் கூறவேண்டிய அவசியமே இல்லை. அவர் தமது வார்த்தையின்படி உன்னை எடுத்து கையாளுவார். உன்னை அவரது அடிமையாகத் தத்தம் செய்ததால் அவர் வைராக்கிய வாஞ்சையோடு உன்னை ஆரத்தழுவி, நீ செய்யவும் சொல்லவும் கூடாதவைகளைப் பிறரைக் கொண்டு செய்யவும்சொல்லவும் வைப்பார். உன்மனதில் மாத்திரம் நிச்சயித்துக் கொள், அவரை எல்லாவற்றுக்கும் நேரடியாகக் கலந்தாலோசி. அவர் உன் நாவைக் கட்டுப்படுத்தவும். உன் கையைக் கட்டவும், உன் கண்களை மூடவும், பிறரைக் காட்டிலும் உன்னிடம் சிறப்பாக கிரியை செய்யவும் அனுமதி. பின்பு, உன் உள்ளத்தில் ஜீவனுள்ள தேவனுடன் மாறாத இணையான அன்பை வளர்த்துக் கொண்டாயானால், உன் அந்தரங்க வாழ்வில் பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டில் நீ நடப்பதால், விநோதமானதும் தனிப்பட்டதும் அவருடைய அன்பு நிறைந்ததுமான மகிழ்ச்சி உன் வாழ்வில் காணப்படும். அப்போதுதான் நீ பரலோக ராஜ்யத்தின் சாவியைக் கண்டிருப்பாய்.



பிரசங்கிக்கிறவன்" ஆனான். (2. பேதுரு 2:5) வரப்போகிற ஜலப்பிரளயத்துக்குத் தப்பும்படி அவன் பேச்சுக்குச் செவி கொடுத்து வருகிறவர்களுக்குத் தேவையான பாதுகாப்பைத் தரும்படியாக ஒரு பெரிய பேழையாகிய கப்பலைக் கட்டும்படி தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டார். அந்தப் பேழையைக் கட்டுகிறதன் மூலம், அவன் பேசின காரியங்களுக்கு ஆதாரமாகத் தன்னுடைய விசுவாசத்தை அவன் செயல் படுத்த முடிந்தது.

## இரட்சிப்பின் பேழை (ஆதியாகமம் 6:14-21)

பேழை என்பது ஒரு பெரிய கப்பல் என்று இந்த காலத்து நவீன முறைகளில் சொல்லலாம். அந்தக் காலத்தின்படி அதுமிகவும் பெரிய அளவில் கட்டப்பட்ட பிரம்மாண்டமான கப்பலாக இருந்திருக்கவேண்டும். அதன் அளவானது சுமார் 150 மீட்டர் நீளமும், 25 மீட்டர் அகலமும் 15 மீட்டர் உயரமுமாக கட்டப்பட்டிருக்கும்.

அந்தப் பேழையின் கட்டுமான அளவும் கட்ட பயன்படுத்தவேண்டிய பொருட்களும் தேவனால் குறிப்பிட்டு கட்டளையிடப்பட்டது. குறிப்பிடத்தக்கது. அது கொப்பேர் மரத்தினால் அறைகளுடன் கட்டப்பட வேண்டும். அதன் உள்புறம் மற்றும் வெளிபுறம் தார் என்ற பெட்ரோலிய கீல் பூசப்படவேண்டும். அதற்கு ஜன்னலும் வாசலும், பொருத்தப்பட்டு, மூன்று மாடியாக கட்ட வேண்டும். நோவாவுக்கும் அவனுடைய சந்ததியாருக்கும் தேவன் கொடுக்கின்ற கட்டளைகளை மிகத் துல்லியமாகப் பின்பற்றிவருவோருக்கு இரட்சிப்பு கிடைக்கும் என்பதை இவை நினைவூட்டுகின்றன.

இரட்சிப்பின் பேழைக்குள் நுழைகிறவர்கள் தவிர மற்ற ஜீவராசிகள் அனைத்தும் சாகவேண்டியதாயிற்று. ஜீவராசிகளைக் காப்பாற்றும்படியாக எல்லா மிருகங்கள், பட்சிகளும் ஆணும் பெண்ணுமாகப் பேழைக்குள் நோவாவுடனும் அவன் குடும்பத்தாருடன் பிரவேசிக்க வேண்டியதாயிற்று. அனைத்து ஜீவராசிகளுக்கும் போதுமான உணவு ஆயத்தமாக்கி, உள்ளே அடைபட்டிருக்கிற நாட்கள் முழுவதிலும் போஷிக்கத்தக்கதாக சேமிக்க வேண்டியதாயிற்று.

## இரட்சிப்பின் அழைப்பு (ஆதியாகமம் 6:22)

இந்த ஆயத்தங்களின் நடுவே நோவா ஜனங்களிடம் பிரசங்கித்தான். தேவனுடைய நிலையான நியாயத்தீர்ப்பு பற்றி அவர்களை எச்சரித்ததுடன், அப்போது காணப்பட்ட தீமையான வழிகளிலிருந்து மனந்திரும்பும்படி அவர்களை வேண்டிக்கொண்டான் *(எபிரெயர் 11:7)* அவன் பிரசங்கித்ததுடன் பேழையையும் சமமாகக் கட்டிக்கொண்டிருந்தான். உலர்ந்த தரையில் தண்ணீர் வராத இடத்தில் பெரியளவில் ஒரு கப்பல் கட்டுவது விபரீதமான செயலாகத் தோன்றியிருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால் நோவாவின் தலைக்கு ஏதோ பித்து பிடித்திருக்க வேண்டும் என்று ஜனங்கள் பேசிகொண்டனர். அவர்கள் அவனைப் பரியாசம் பண்ணி திட்டியிருப்பார்கள். யாருமே மனந்திரும்பும்படியாக அவன் கொடுத்த குரலுக்கு செவிகொடுத்ததாகத் தெரியவில்லை.

ஆனால் குற்றம் செய்வதில் பெரியவர்களாக இருந்தார்கள். அவர்களை "வல்லவர்கள்" பேர்பெற்றவர்கள் - தங்கள் பொல்லாப்புக்கு புகழ் பெற்றவர்கள் என்று அழைத்தனர். அவர்களுடைய மனப்பான்மையை யோபு 22:15-17ல் பார்க்கலாம். ''அவர்கள் தேவனை நோக்கி, எங்களைவிட்டு விலகும். சர்வவல்லவராலே எங்களுக்கு என்ன (நன்மை) ஆகும் என்றார்கள்".

பொல்லாப்பு எல்லாப் பக்கங்களிலும் பெருகியிருந்தது. மனிதருடைய இருதயங்களின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததும் விரோதமுமாக இருந்தது. (வச.5) "பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது. பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது" (வச. 11). அக்கிரமம் பரவலாகப் பெருகியிருந்ததால், தேவன் அந்த நாகரீகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்படி தீர்மானித்தார் (வச. 5-7).

## நோவாவின் அழைப்பு (ஆதியாகமம் 6:8-10)

தேவபயமற்ற அந்த உலகில் தனியாக, ''நோவாவுக்கு யாஹ்வே கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. அவனுடைய குணமும் நடத்தையும் பற்றி வசனம் 9ல் எழுதப்பட்டுள்ளன. "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனு(குற்றமற்றவன்)மாயிருந்தான். நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்" (வச. 9) தன்னைச் சுற்றி ஜனங்களெல்லாரும் எல்லாப் பக்கத்திலேயும் சூழ பொல்லாப்பு நிறைந்தவர்களாயிருந்தும், நோவாவைத் தேவன் இரக்கத்துடன் ஏற்றுக் கொண்டு, அவனைப் பார்த்து : "உன்னை இந்தச் சந்ததியிலே எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்" (ஆதியாகமம் 7:1 உடன் எபிரெயர் 11:7 ஒப்பிடுக).

## தேவனுடைய நியாயத்தீர்ப்பு (ஆதியாகமம் 6:11-13)

பூமியானது ஆரம்பம் முதல் மனிதனுடைய கட்டுப்பாட்டிலும் ஆட்சியிலும் கீழடங்கியிருக்க வேண்டியதாக இருந்தது (1:26) ஆனால் ஆதாம் பாவம் செய்தபோது, மனுக்குலம் பாவத்தின் கட்டுப்பாட்டுக்கும் ஆட்சிக்கும் கீழ் வந்தது. சந்ததிகள் பெருகிவளர, மனிதர்கள் தங்கள் இச்சைகளினால் நிறைந்து அநேக உபாய தந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள் (பிரசங்கி 7:29) அவர்கள் தேவனைவிட்டு விலகினபடியால், அவர்களை அவர் ஒப்புக் (விட்டுக்) கொடுத்தார் (ரோமர் 1:28) நீண்ட கால முடிவுக்குப் பின் அவர் "மாம்சமான எல்லோரையும்" அழிக்கத் தீர்மானம் பண்ணினார்.

ஆயினும், நியாயத்தீர்ப்பின் முகாந்திரம் வரும்போது, தேவனுடைய நீடிய பொறுமை வெளியாகிறது. உலகத்தின் ஜனங்கள் தங்கள் பாவங்களை ஏற்றுக்கொண்டு, அறிக்கையிட்டு விட்டுவிடும்படி அவர் மேலும் 120 வருடங்கள் கொடுக்கத் தீர்மானித்தார். (வச. 3.; 1.பேதுரு 3:20). இந்தக் காலம் முடியும் மட்டும், நோவா தேவனுடைய மாறாத தீர்ப்பைக் குறித்து பிரசங்கிக்கும்படி கட்டளைப் பெற்றிருந்தான் (வச.13) எனவே அவன் தேவனுடைய வார்த்தையை அறிவித்து, மார்க்கம் தப்பிப்போனவர்களை எல்லாம் மறுபடியும் தன்னிடம் திரும்பி சேரும்படி அறைகூவி அழைத்தான். இவ்வாறு அவன் ''நீதியைப்



# தேனீ தேனாய் இருந்து ஒப்புக்கொடு!



**தேவனின் அதிசயக் கிரியைகளைக் கவனியுங்கள்.**

தேனீக்களின் இரைச்சல் அவை ஆச்சரியமானவை என அறிவிக்கிறது. அது மட்டுமல்ல, பரிணாமக் கொள்கையைக் கொடுக்கினால் கொட்டுவது போன்ற ஒரு சங்கதியும் சொல்கிறது. எது முதலில் வந்தது, தேனீயா அல்லது அதைச் சார்ந்துள்ள பூக்கும் தாவரங்களா ? உயர்வாழ தேனீக்களைச் சார்ந்திருக்கும் 3000 தாவர இனங்களின் தேவைகளைத் தேனீக்களின் சிக்கலான வாழ்க்கை முறை சந்திக்கிறது. தேனீ என்பதன் வார்த்தைக்கு எபிரேய மூல வார்த்தை 'டாபர்' என்பது. பேச்சு அல்லது உரையாடல் என்பதற்கும் அதே வார்த்தைதான். ஒரு தேன்கூட்டிற்கு ஒரு நல்ல தகவல் தொடர்பு அவசியம்தான் - உண்மையில் அவை தகவல் பரிமாற்றத்திற்கு நடனம் அல்லது வாசனையைப் பயன்படுத்துகின்றன. கோடையில் ஒரு தேனீ சமுகம் ஒழுங்காகப் பணியாற்ற - முட்டையிட, அடைகாக்க, இளம் தேனீக்கு உணவூட்ட, கூடுகட்ட, காவல் காக்க, மகரந்தம் சேர்க்க இப்படி எத்தனையோ வேலைகள் செய்ய 60,000 தேனீக்கள் தேவைப்படுகின்றன.

ஒரு தேனீ என்றவென்று பாருங்கள் கட்டிட நிபுனர் : ஒரு தேன் கூட்டின் சிற்றைகளைப் பாருங்கள். இளம் வேலைக்காரத் தேனீக்கள் இரைச்சலிட்டு சிறகடித்து தங்கள் உடல்களின் ஓரங்களிலுள்ள சுரப்பிகளை இயங்கச் செய்யப் போதுமான வெப்பத்தை உண்டாக்குகின்றன. ஆகவே தேன், மெழுகாக மாறுகிறது. முதிர்த்த தேனீக்கள் வெவ்வேறு இடங்களில் ஒரே மாதிரியும், அளவுமான மெழுகுச் சிற்றறைகளைக் கட்டுகின்றன. சிற்றைகளின் அவர்களின் தனிமம் ஒரு அங்குலத்தில் 2000 பங்கு சிறியது - ஆறு பக்கங்களுடையது - மிகத் திறம்பட கணித முறைப்படி, குறித்த பரப்பளவில் மிக அதிக அளவு தேவை சேமித்துவைக்கக் கூடியவாய் கட்டப்பட்டுள்ள. கடைசியில் அணிகள் ஒன்று சேரும் பொழுது மிகச் சரியாக ஒன்று சேரும் அறைகள் தான் இருக்கின்றன.





வேதி பொருள் தொழிற்சாலை : தேனீக்கள் அநேக எண்ணிக்கையுள்ள பொருள்களைச் செய்கின்றன. இரண்டு விதமான மெழுகு, தேன், ராயல் ஜெல்லி, நச்சு பட்டு இன்னும் அநேகம்.

செய்தி கொண்டுவரும் தேனீ : தேனீக்கள் மகரந்தம் சேர்க்கும் விசேஷித்த கால்களைப் பெற்றிருக்கின்றன. தனித்துவம் வாய்ந்த 3 ஜோடி கால்கள் திறம்பட செயல்பட்டு மகரந்தத்தைச் சேகரிப்பதோடு, தங்கள் உணர்கொம்புகள் மகரந்தத்தை முகர்ந்து காண, அவற்றைச் சுத்தப்படுத்துகின்றன.

வழிகாட்டும் தேனீ : வழியைக் கண்டுபிடித்துப் பறக்க, தேனீக்கள் 6900 பகுதிகளுள்ள கூட்டுக் கண்களோடு 3 எளிமையான கண்களும் பெற்றுள்ளன. அவை சூரிய ஒளியின் முனையைப் பயன்படுத்தி உணவு இருக்கும் பாதையில் பறக்கின்றன. ஒளியில் ஏற்படும் வேறுபாடுகள் தூரத்தை மதிப்பிட உதவுவதாகக் கருதப்படுகிறது. இந்தச் செய்தி மற்ற தேனீக்களுக்கு ஒரு விசேஷித்த நடனம் மூலம் தெரிவிக்கப்படுகிறது. அவை இரவிலே பறக்க ஒளி முனையைப் பயன்படுத்த வேண்டுமாயின் பூமியின் வளைவு குறித்த புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

மகரந்தம் சேர்க்கும் தேனீ : தேனீக்கள் ஒரு தடவையில் ஒரே வகைப்பூக்களிடம் தான் செல்லும். பூக்களில் மகரந்தச் சேர்க்கை



நடைபெற இது சிறந்தது தான். ஆனால் தேனீக்களுக்கு இந்த ஒழுங்கு தேவையில்லை. ஏனென்றால் எப்படியும் எல்லா மகரந்தங்களும் கடைசியில் கலக்கப்படுகின்றன.

இத்தகைய சிக்கலான, ஒன்றுக்கொன்று ஆதரவாயுள்ள சமுதாயத்தை எப்படி சின்னச் சின்ன பரிணாமப் படிகள் உண்டாக்க முடியும்? மேலே கண்ட எல்லா திறமைகளோடுங் கூட தேனீ ஒரு சத்துணவு நிபுணர்,ஒரு தோட்டக்காரன்,ஒரு முன்னேற்பாடாய் திட்டமிடுபவர். எந்த ஒரு ஆணோ, பெண்ணோ இதுவரை தேனை செய்யவில்லை. *போய், முயன்று பார் அல்லது உண்மையை அறிக்கியிடு "கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது. அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்" சங்கீதம் 104:24.*

# நோவா - பழைய உலகின் அழிவு

**"எட்டு ஆத்துமாக்கள் மாத்திரம் தண்ணீரினால் இரட்சிக்கப்பட்டார்கள்."**

காயீன் யாஹ்வே கர்த்தரின் பிரசன்னத்திலிருந்து விரட்டப்பட்டபோது, மனிதனின் சுயசித்தத்துக்காக வாழும் வாழ்க்கையைத் தெரிந்து கொண்டபோது நடந்ததைப்பற்றி ஆதியாகமம் நான்காம் அதிகாரம் கூறுகிறது. காயீனின் ஆவி அவனுடைய சந்ததியிலும் தங்கிவிட்டது. அது பட்டண வாழ்விலும் (வச. 17) இருமனைவிகளை மணம் செய்வதிலும் (வச. 19), வியாபாரத் தொழிலிலும் (வச. 20) தேவனற்றவர்கள் தொழுகை செய்யும்படி உருவாக்கும் சிலை வடிவமைப்பிலும் (வச. 21), போரின் யுத்தியிலும் (வச. 22) வெளிபட்டது. அவர்கள் உண்மையில் ''மனுஷ புத்திரர்'' ஆக இருந்தனர்.



ஆதியாகமம் 4, சேத்தின் பிறப்பையும் அறிவிக்கிறது. அவனது பெயரின் பொருள் ''நியமிக்கப்பட்டவன்''. ஏனெனில் காயீன் கொன்றுப்போட்ட ஆபேலுக்குப் பதிலாக ஏவாளுக்குத் தேவன் மற்றொரு புத்திரனை நியமித்து அளித்தார் (வச.25) ஆனால் காயீனின் சந்ததி உலகப் பிரகாரமான லௌகீகம், இச்சை மற்றும் பலவந்தத்தினால் நிறைந்திருந்தது. சேத்தின் சந்ததியரோ தேவனுடைய மார்க்கத்தைப் பின்பற்றி, தங்களுடைய எதிர்காலத்துக்காக அவர்மேல் தங்கி தரித்தார்கள். ஆகவே அவர்கள் அவருடைய வாக்குப்பண்ணப்பட்ட மீட்பைப் பெறும்படி அவரை நோக்கி தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள் (வ.26). சேத்தின் சந்ததிபற்றி ஆதியாகமம் 5ல் எழுதப்பட்டுள்ளது. அந்த வம்சம் நோவாவில் முடிந்தது. அவனுடைய மக்கள் சேம், காம், யாப்பேத். இந்த வம்சம். "தேவனுடைய புத்திரர்" உருவாகக் காரணமாக இருந்தது.

தேவனுடைய புத்திரர் உலகத்திலிருந்து விலகி நில்லாமலிருக்கும் போது, பாவமும் பொல்லாங்கும் தண்டிக்கப்படுவதை இந்தப் பாடம் காட்டுகிறது.

## ஆதியாகமம் 6-9

### "அவர்களை விட்டுப் பிரிந்திருங்கள்" (ஆதி. 6:1-2)

நீண்ட காலத்துக்கு சேத்தின் சந்ததியார் காயீனின் சந்ததியாரோடு சம்பந்தம் கலவாமல் பிரிந்திருந்தனர். காயீனின் புத்திரர் தேவனுடைய காரியங்களைக்



குறித்து கவலையற்று ஜீவித்திருந்தனர். காயீன் என்பதற்கு "சுயலாபம்" என்று பொருள். காயீனின் சந்ததி உலகம் தரும் லௌகீக சுகத்தினால் கிடைக்கும் சரீர இன்பத்தைத் தேடி அலைந்தனர். அவர்கள் சொத்துக்களைக் குவிப்பதில் கைத்தேர்ந்தவர்களும் ஐம்புல இன்பத்தை பெற வாஞ்சிக்கிறவர்களுமாயிருந்தனர். அவர்கள் தங்கள் வழியில் குறுக்கே வந்தவர்களைக் குரூரமாக அகற்றுகிறவர்களாயிருந்தனர்.

சேத்தின் சந்ததி வித்தியாசமானவர்களாக இருந்தனர். அவர்கள் லௌகீக இன்பத்தினால் வருவவைகளை வெறுத்து தேவனை நோக்கிப் பார்த்தார்கள். ஏனோக்கைப் போன்ற நீதிமான்களையும் உத்தமர்களையும் போற்றினார்கள். ஏனெனில், "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக்கொண்டார்" (ஆதியாகமம் 5:24).



ஆனால் நாட்கள் செல்ல, மெதுவாக, அந்த இரு குழுக்களுக்கும் நடுவே இருந்த வித்தியாசம் மறைந்தது. அந்தக் காலத்தில் சடிதியான ஜனப்பெருக்கம் உண்டாகி, ஜனங்கள் பூமியெங்கும் குடியேற ஆரம்பித்தனர். அப்போது, "தேவ புத்திரர்" மனுஷகுமாரரின் வாழ்க்கை முறையைப் பார்த்து பொறாமைப்பட ஆரம்பித்தனர். கொஞ்சங் கொஞ்சமாக இரு சந்ததியாரும் ஒன்றாகக் கலக்க ஆரம்பித்தனர். சில "தேவபுத்திரர்" "மனுஷபுத்திரரின்" அழகான தோற்றத்தினால் வஞ்சிக்கப்பட்டு, அவர்களுடைய பெண்களை விவாகப்பண்ணினர்.

தேவபுத்திரர் ஆராதித்து வந்த ஸ்தலமாகிய தேவனுடைய சந்நிதியிலிருந்து விலகின காயீன், நோத் (அதாவது நாடு கடத்தல்) என்னும் தேசத்துக்கு விரட்டப்பட்டான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு தேவ புத்திரன் ஒருவன் மனுஷபுத்திரரின் மகளை விவாகஞ் செய்வது ஒருவன் நீதியின் வழிகளிலிருந்து விலகி, தானே தேவனை விட்டு தூரமாய் விலகிச் செல்வதற்கு வழிநடத்தும். சத்தியத்துக்குப் புறம்பாக விவாகம் செய்தல் எப்போதும் தவறாகும் (2. கொரிந்தியர் 6:14), இந்த சம்பவத்தில் அது மாபெரும் பொல்லாங்குகளுக்கு வழிநடத்தும், அப்படி விவாகஞ்செய்தது அழிவுக்குப் போய் முடிந்தது. "தேவபுத்திரர்" முழுவதுமாக லௌகீக சம்பந்தம் கலந்து அதேவிதமாக அனுபவிக்கக் கூடும். அவர்கள் சத்தியத்துக்குப் புறம்பாக உணர்ச்சி வசப்பட்டு விவாகஞ்செய்து ஆபத்தில் சிக்கிக் கொள்கின்றார்கள். அதற்கான காரணங்கள் வேறே விதமாகவும் காணப்படலாம்.

### பொல்லாங்கான உலகம் (ஆதியாகமம் 6:3-7)

அந்நாட்களில், பூமியில் ''ராட்சதர்கள்'' இருந்தார்கள். அவர்கள் சரீரப்பிரகாரமான ஸ்தூல உடல் கொண்டவர்களாக இருக்க அவசியமில்லை.